[1971 டிசம்பர் 13

திருமதி த. ந. அனந்தநாயகி : எத்தனை பேர் அங்கு வாடகை கொடுக்காமல் இருக்கிறார்கள்? யாருக்கு ஒதுக்கப்பட்டதோ, அவர்கள் குடியில்லாமல் வேறு யாராவது இருக்கிறார்களா? இதையெல்லாம் கவனித்து சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைப் பற்றிய புள்ளி விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அதற்கான நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் தக்கபடி மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வீட்டு வாடகை கொடுக்காததை பற்றி அல்ல வீட்டு வாடகை வாங்க மறுத்தது பற்றி.

Procession by staff of Electricity Board

* 338. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there was any protest procession by the staff of the Electricity Board at Madras about 18th August 1971 against the transport crew; and

(*b*) if so, ,the details of the action taken in this connection?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (ஆ) விவர அறிக்கை @ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவரவர்களே, மின்சாரத் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற போது, வேறு பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது, ஆகவே, மோதல் ஏற்பட்டது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. எனவே, மின்சாரத் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நேரத்தில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத முறையில் வேலை செய்யும் சூழ்நிலையை அரசு உண்டாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த இடைஞ்சல் தற்செயலாக ஏற்பட்ட ஒன்று. வழக்கமாக ஏற்படுவதல்ல. மின்வாரியத் தொழிலாளர்கள் மின் கம்பங்களை நட்டுக் கொண்டிருக்கும்போது, வீதியில் நடந்தது. எனினும், இடைஞ்சல் இல்லாத முறையில் இனிமேல் நடைபெற போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மின்வாரியப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு

* 339. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டு மே மாதம் மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதா?

@ 85-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.